# முஸ்லிம் பிரேரணைகள்
## வடக்கு கிழக்கு இடைக்கால நிருவாக சபை

எம்.ஐ.எம். முஹியத்தீன்

### அறிமுகம்

சமாதானப் பேச்சுவார்த்தை அதிகாரப் பகிர்வு மற்றும் வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்களின் அந்தஸ்து, பாதுகாப்பு, இடம்பெயர்ந்தோர் மீள்குடியேற்றம் என்பவற்றை மையமாகக் கொண்டதாகவே இருக்கும். முஸ்லிம்களின் எதிர்காலம் எவ்வாறு அமையப் போகின்றது என்பது பற்றி வடக்குக் கிழக்கு முஸ்லிம்கள் கரிசனை கொண்டுள்ளனர். வடக்குக் கிழக்குப் பிராந்தியத்தில் ஆதிக்கம் செலுத்தும் சக்தியாக எல்.ரி.ரி.ஈ இருக்கும் அதேவேளை, ஒன்றிணைந்த வடக்கு கிழக்கு இடைக்கால சுயாட்சி அதிகார சபைக்கு அரசாங்கமும் எல்.ரி.ரி.ஈ யும் உடன்படும் பட்சத்தில், முஸ்லிம்களுக்குச் சுயாட்சி அதிகாரப் பகிர்விற்கான ஏற்பாடுகளை ஏற்படுத்திச் சொத்துரிமை, பாதுகாப்பு என்பவற்றிற்கு உத்தரவாதமும் கொடுக்கப்பட வேண்டும். வடக்கு கிழக்கின் பொருளாதாரத்தின் மீதான ஆதிக்கம் தமக்கேயுரியது என அழுத்தியுரைக்கும் எல்.ரி.ரி.ஈ குறித்து முஸ்லிம்களிடையே அச்சமும் அங்கலாய்ப்புகளும் எழுந்துள்ளன. தமது சொந்த காவல் நிலையங்களையும் நீதிமன்றங்களையும் ஏற்படுத்தியுள்ளமை, தமக்கென ஒரு மத்திய வங்கியையும் அதுபோன்று இன்னும் வேறுபல ஏற்பாடுகளையும் செய்துள்ளமையானது எல்.ரி.ரி.ஈ ஏற்கனவே தமது சுயாட்சி அதிகார சபையை ஏற்படுத்திக் கொண்டுவிட்டார்களோ என்னும் சந்தேகம் இன்று வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் சிக்கலான பிரச்சினைகளுள் முக்கியமானவை.

"1990இல் வடக்கிலிருந்து முஸ்லிம்களை பலவந்தமாக, வெளியேற்றியமை எந்த விதத்திலும் "நியாயப்படுத்தப்பட முடியாத ஒரு மாபெரும் அரசியல் தவறு" என கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பகிரங்கக் கூட்டமொன்றில் தெரிவித்து எல்.ரி.ரி.ஈ சார்பாக அதற்கு முஸ்லிம்களிடம் மன்னிப்பும் கோரியிருந்தார். அதனையே, 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆந் திகதி எல்.ரி.ரி.ஈ தலைவர் கூட்டிய சர்வதேச ஊடகவியலாளர் மாநாட்டில் மேலும் இது பற்றிக் கூறுகையில், "கடந்த காலத்தில் புரியப்பட்ட தவறுகளை நாம் மறப்போம், மன்னிப்போம். தமிழீழம் என்பது முஸ்லிம்களின் தாயகமாகவும் இருக்கின்றது. எனவே பிராந்தியத்தில் சமாதானத்தையும் சுபீட்சத்தையும் முன்னெடுப்பதற்கு எமக்குள் நல்லிணக்கத்தையும் நட்புறவையும் கொண்டவர்களாய் வாழ்வது அவசியம்" எனத் திரு. பாலசிங்கம் தெரிவித்தார். சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது முஸ்லிம்கள் பங்கேற்பதை எல்.ரி.ரி.ஈ. அனுமதிக்குமா என அவ்வூடகவியலாளர் மாநாட்டில் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள், "சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தை நாம் நிச்சயமாக வரவேற்போம். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் அதேவேளை முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டியது மிக முக்கியமானதாகும்" என்று தெரிவித்தார்.

இது இப்படியிருக்க, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர், வாழைச்சேனையில் 2002 ஜூன் மாதத்தில் 13 முஸ்லிம்கள் எல்.ரி.ரி.ஈ னரால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட இரு முஸ்லிம்களின் சடலங்களை முஸ்லிம் சமய அனுஷ்டானப்படி நல்லடக்கம் செய்யும் உரிமையை மறுத்து அவர்களின் பெற்றோர் மற்றும் அரச பாதுகாப்புப் படையினர் முன்னிலையில் டயரில் போட்டு எரித்தமை, அரச கட்டுப்பாட்டுப் பிரதேசமான கிண்ணியா குரங்குபாஞ்சானில் உள்ள எமது பள்ளிவாசலினுள் இராணுவ முகாமொன்றை அமைத்துக் கொண்டமை எல்.ரி.ரி.ஈ யால் யுத்த நிறுத்தத்தின் பின்னர் கைச்சாத்தான புரிந்துணர்வு உடன்படிக்கையை அப்பட்டமாக மீறிய செயல்களாகும்.

இந்த நிலையில் எமது உயிர்களையும் பாரம்பரிய தாயகத்தையும் பாதுகாக்கும் பொருட்டு யாப்பு ரீதியிலான ஏற்பாடுகளையும் சர்வதேச உத்தரவாதத்தையும் ஏற்படுத்த வேண்டிய கட்டாய தேவைப்பாடு வடக்குக் கிழக்கு முஸ்லிம்களாகிய எமக்கு இன்று ஏற்பட்டுள்ளது.

**வடக்குக் கிழக்கு முஸ்லிம்களின் அக்கறைகள் :**

1. சமாதானப் பேச்சுவார்த்தையில் வடக்குக் கிழக்கு முஸ்லிம் பிரதிநிதித்துவம்
2. வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் தனித்துவம், பாரம்பரிய தாயகப் பிரதேசங்களின் இறைமை, பாதுகாப்பு
3. வடக்குக் கிழக்கு முஸ்லிம் தாயகத்தில் சட்டமும் ஒழுங்கும்.
4. இடைக்கால நிருவாக சபையில் வடக்கு கிழக்கு முஸ்லிம் பிரதிநிதித்துவம்.
5. வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தி.
6. வடக்கு கிழக்கு பிரதேசத்தில் முஸ்லிம்களுக்கெனத் தனியான நிருவாக மற்றும் அரசியல் அலகு.

# பிரேரணைகள்

<u>வடக்கு கிழக்கு இடைக்கால நிருவாக சபை</u>

1. வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிருவாகத்திற்கென 5 வருட காலத்திற்கு இடைக்கால சபையொன்று நிறுவப்படுதல் வேண்டும்.
2. யுத்த அழிவுக்குட்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களைப் புனரமைத்து அபிவிருத்தி செய்தலும் சமாதானத்தையும் இயல்பு நிலையையும் அங்கு ஏற்படுத்துவதுமே இவ்விடைக்கால நிருவாக சபையின் நோக்கமாக இருத்தல் வேண்டும்.
3. இனக்குழப்பங்கள் தொடங்கிய காலத்திலிருந்து இடம்பெயர்ந்து சென்ற அனைத்து மக்களையும் விரைவாக மீள்குடியேற்றி அவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதை இடைக்கால நிருவாக சபை உறுதிப்படுத்தல் வேண்டும்.
4. இடம்பெயர்ந்த மக்களுக்குப் புனர்வாழ்வளித்தல், இழந்த அவர்களது வதிவிடங்களையும், சொத்துக்களையும் மீளப்பெறுவதை உறுதிப்படுத்தல் மற்றும் போதுமான அளவு அவர்களுக்கு நஷ்டஈடு வழங்குதல் என்பவை இடைக்கால நிருவாக சபையின் கடமையாக இருத்தல் வேண்டும்.
5. இடைக்காலத்தின்போது வன்முறை தணிக்கப்படுதலையும் துணை இராணுவக் குழுக்கள் சட்டவிரோதமாக வைத்திருக்கும் ஆயுதங்கள் களையப்படுவதையும் வடக்கு கிழக்கு இடைக்கால நிருவாக சபை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

<u>இடைக்கால நிருவாக சபை அமைப்பு</u>

(i) தேர்தல் ஆணையாளரால் 1998 இன் மாகாண சபை தேர்தல்கள் சட்டத்தின் பிரிவு 3 (3) இன் கீழ் நிர்ணயிக்கப்பட்டவாறு வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள மாவட்டங்களிலிருந்து வடக்கு கிழக்கு மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட உரித்துடையவர்களின் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையிலான உறுப்பினர்களின் எண்ணிக்கை எதுவோ அதுவே வடக்கு கிழக்கு இடைக்கால சபையின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையாக வேண்டும்.

(ii) இடைக்கால நிருவாக சபையானது வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற மூன்று சமூகங்களின் பிரதிநிதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iii) மூன்று சமூகங்களின் அங்கத்துவத்தின் விகிதாசாரம் ஜனாதிபதியால் தீர்மானிக்கப்படும். கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் பெரும்பான்மையையும் பிரதிநிதித்துவத்தையும் விட்டுக் கொடுப்பதால் குறைந்தபட்சம் 30% ஆசனங்கள் முஸ்லிம்களுக்காக ஒதுக்கப்பட வேண்டும்.

(iv) வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களைப் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகளை ஜனாதிபதி அழைத்து அக்கட்சிகளுக்குப் பாராளுமன்றத்தில் இருக்கும் ஆசனங்களின் விகிதாசாரத்திற்கமைய இடைக்கால நிருவாக சபையில் தமது பிரதிநிதிகளின் பெயர்களை அறிவிக்குமாறு செய்வார்.

<u>இடைக்கால நிருவாக சபையின் அதிகாரங்களும் கடமைகளும்</u>

(i) புதிய யாப்பின்கீழ் நிறுவப்படும் பிராந்திய சபைகளின் அனைத்து அதிகாரங்களையும் இடைக்கால நிருவாக சபை செயற்படுத்தும் உரித்துடையதாதல் வேண்டும்.

(ii) இடைக்கால நிருவாக சபையின் அதிகாரங்களனைத்தும் யாப்பில் போற்றிவைத்துப் பேணப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) இடைக்கால நிருவாக சபையின் கடமைகளும் ஆளுநருடனான அதன் தொடர்புகளும் யாப்பில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) முதலமைச்சர், பிரதி முதலமைச்சர் மற்றும் ஏனைய அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய மைய விடயங்களும் கடமைகளும் யாப்பில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(v) இடைக்கால நிருவாக சபையானது மனித உரிமை மீறல்களுக்கெதிராகப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும் அந்தஸ்துள்ளதாக அமைய வேண்டும்.

<u>வடக்குக் கிழக்கில் உள்ள முஸ்லிம்களின் பாரம்பரிய தாயகத்தின் நிர்வாகம்</u>

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட அனைத்துப் பிரதேச செயலாளர் பிரிவுகளும் கொத்தணிகள் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டு ஒவ்வொரு மாட்டத்திலும் தனித்தனி முஸ்லிம் செயலாளர்களின் கீழ் கொண்டுவரப்படல் வேண்டும்.

## இடைக்கால நிருவாக சபையின் நிறைவேற்று முகவர்கள்

(i) இடைக்கால நிருவாக சபையின் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களும் அந்தந்த உள்ளூர் அதிகார சபைகளினூடாகச் செயற்படுத்தப்படல் வேண்டும்.

(ii) இடைக்கால நிருவாக சபை நிறுவப்பட்டதும் மத்திய அரசானது, வடக்கு கிழக்கு மாகாணங்கள் பூராகவும் இனத்துவ ரீதியிலான உள்ளூர் அதிகார சபைப் பிரதேசங்களை நிறுவும் பொருட்டு எல்லை நிர்ணய ஆணைக்குழுவொன்றை உடனடியாக நியமிக்க வேண்டும்.

(iii) குறித்த உள்ளூராட்சி அதிகாரசபைப் பிரதேசத்தினுள் ஒவ்வொரு சமூகத்தைச் சார்ந்த மக்களுக்குச் சொந்தமானதுமான வதிவிடக் காணிகள், விவசாயக் காணிகள் மற்றும் மூலவளங்கள் ஆகிய அனைத்தும் அதே இனத்துக்கென அமைக்கப்படும் உள்ளூராட்சி அதிகாரசபைப் பிரதேசத்தினுள் வரும் வகையில் ஆணைக்குழுவானது இயலுமான வரையிலும் உள்ளடக்க முயற்சி எடுத்தல் வேண்டும்.

(iv) எல்லைகளை நிர்ணயம் செய்யும் போது வெவ்வேறு சமூகங்களினதும் மக்களினதும் அச்சங்களையும் ஐயப்பாடுகளையும் நீக்கும் பொருட்டு எல்லை நிர்ணய ஆணைக்குழுவானது ஏலவே உள்ள உள்ளூர் ஆட்சி அதிகார சபைகளின் எல்லைகளை மீள்பரிசீலனை செய்து, மேலதிக எண்ணிக்கையிலான இனத்துவ ரீதியிலான உள்ளூர் ஆட்சி அதிகார சபைப் பிரதேசங்களை உருவாக்குவதற்கான பரிந்துரைகளைச் செய்யும்.

(v) பரிந்துரைக்கப்பட்ட அவ்வாறான புதிய உள்ளூராட்சி அதிகார சபைகள் ஆறு (6) மாத காலத்தினுள் நிறுவப்படுதல் வேண்டும். அத்துடன், மத்திய அரசாங்கமானது இடைக்கால சபையின் உதவியுடன், சகல உள்ளூர் ஆட்சி அதிகார சபைகளுக்கும் பிரதேசத்திலுள்ள எவ்வாட்சி அதிகாரசபையின் பதவிக்காலம் காலாவதியாகி விட்டதோ அவ்வதிகார சபைகளுக்குமான தேர்தல்களை நடாத்துவதை உறுதி செய்தல் வேண்டும்.

## சிறுபான்மையினரின் பாதுகாப்பு ஏற்பாடுகள்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் சகல சமூகத்தினரும் இடைக்கால நிருவாக சபையில் பங்கேற்பதையும் அதன் செயற்பாடுகளில் ஒன்றுபட்டுழைப்பதையும் உறுதிப்படுத்தும் பொருட்டுப் பின்வரும் பாதுகாப்பு ஏற்பாடுகள் அமைதல் வேண்டும்.

(i) இடைக்கால நிருவாக சபையானது குழுக்களாகச் செயற்படும்.

(ii) குழுக்களின் தலைவர்கள், அமைச்சர்கள் மற்றும் ஏனைய பதவிகள் சகல சமூகங்களையும் சார்ந்த உறுப்பினர்களைக் கொண்ட பதவிநிலைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

(iii) யாப்பில் உள்ளடங்கிய அடிப்படை உரிமைகளை மீறாதிருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டுக் குழுக்களால் எடுக்கப்படும் முக்கிய தீர்மானங்களும் சட்டமியற்றல்களும் நிரூபிக்கப்படல் வேண்டும்.

(iv) பின்வரும் சந்தர்ப்பங்களில் இடைக்கால நிருவாக சபையில் எடுக்கப்படும் எந்த ஒரு தீர்மானமும் செல்லுபடியற்றதாகும்.

(அ) எந்த ஒரு சமயமும் சுதந்திரமாக இயங்குவதைக் கட்டுப்படுத்தித் தடை செய்தால்,

(ஆ) மற்றைய சமூகங்களையோ அல்லது மதங்களையோ எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தாது குறிப்பிட்ட ஒரு சமூகத்தையோ அல்லது மதத்தையோ சார்ந்த நபர்களை மட்டும் இயலாமைகளுக்கும் அல்லது தடைகளுக்கும் உட்படுத்துமுகமாக இருந்தால், அல்லது

(இ) மற்றைய சமூகங்களையோ அல்லது மதங்களையோ சார்ந்த நபர்களுக்கு வழங்கப்படாத சிறப்புரிமைகளையோ அல்லது அனுகூலங்களையோ குறிப்பிட்ட ஒரு சமூகத்தையோ அல்லது மதத்தையோ சார்ந்தவர்களுக்கு மட்டும் வழங்குவதாக இருந்தால், அல்லது

(ஈ) குறிப்பிட்ட ஒரு சமயம் சார்ந்த சபையொன்றின் ஆட்சிபீடத்தின் அங்கீகாரத்துடனான சந்தர்ப்பம் தவிர்ந்த ஏனைய வேளைகளில் அச்சமயம் சார்ந்த சபையின் யாப்பு விதியை மாற்றுமுகமாக இருந்தால் (சோல்புரி அரசியலமைப்பின் 29ஆம் பிரிவை ஒத்தது)

எ) பிரதேசத்திலுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சிறுபான்மை சமூகங்களைப் பாதிக்கக்கூடிய முக்கிய தீர்மானங்கள் அல்லது கட்டளைகள், இரட்டிப்புப் பெரும்பான்மையுள்ள சந்தர்ப்பங்கள் தவிர்ந்த வேளைகளில், செல்லுபடியற்றதாக வேண்டும்.

ஏ) இடைக்கால நிருவாக சபையின் பிரதி முதலமைச்சர் ஆனவர் முதலமைச்சர் மாநாட்டினதும் அதே சமயம் காணி மற்றும் நீர்ப்பயன்பாட்டு சபையினதும் உறுப்பினராதல் வேண்டும்.

## அமைச்சரவையும் அதன் அளவும்

i) இடைக்கால நிருவாக சபையின் அமைச்சரவையில் குறைந்தபட்சம் பதினொரு (11) உறுப்பினர்கள் இருத்தல் வேண்டும்.

(ii) இப்பதினொருவரில் மூவர் (3) பிரதேசத்தின் முதற் சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாய் இருத்தல் வேண்டும்.

(iii). இரண்டாவது சிறுபான்மைச் சமூகத்திலிருந்து குறைந்தபட்சம் ஒரு (1) உறுப்பினராவது இருத்தல் வேண்டும்.

(iv). பிரதி முதலமைச்சரும் பிரதேசத்திலுள்ள சிறுபான்மைச் சமூகங்களின் ஏனைய அமைச்சரவை அமைச்சர்களும் இடைக்கால நிருவாக சபையில் உள்ள தத்தமது சமூகங்களைச் சேர்ந்த பெரும்பான்மையான உறுப்பினர்களின் நம்பிக்கைக்குரியவர்களாக இருத்தல் வேண்டும்.

<u>சட்டமும் ஒழுங்கும்</u>

(i) முதலமைச்சரானவர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சட்டம் மற்றும் ஒழுங்கு என்பவற்றுக்கு ஒட்டுமொத்தமான பொறுப்பைக் கொண்டிருக்கும் அதேவேளை அவர் பாரம்பரிய முஸ்லிம் தாயகங்களில் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றில் நேரடியாகப் பதில் சொல்லும் பொறுப்பைக் கொண்டுள்ள பிரதி முதலமைச்சருடாகவே தனது அதிகாரங்களைச் செயற்படுத்துதல் வேண்டும்.

(ii) ஒவ்வொரு உள்ளூர் அதிகார சபைப் பிரதேசத்திலும் ஒரு பொலிஸ் நிலையம் இருத்தல் வேண்டும் என்பதுடன் குறிப்பிட்ட உள்ளூர் அதிகார சபையின் இனத்துவ விகிதாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் பொலிஸ் படை அமைந்திருத்தல் வேண்டும்.

(iii) பாரம்பரிய முஸ்லிம் தாயகங்களில் உள்ள பொலிஸ் நிலையங்கள் யாவும் அந்தந்த முஸ்லிம் மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகர், முஸ்லிம் மாகாண சிரேஷ்ட அத்தியட்சகர் மற்றும் முஸ்லிம் பிரதேச பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்குக் கீழ் வருதல் வேண்டும்.

<u>வரவு செலவு ஒதுக்கீடுகள்</u>

நிதிகளை ஒதுக்கீடு செய்து பொருத்தமான கட்டளைகளை இடைக்கால நிருவாக சபைக்கு வழங்குமுன் நிதி ஆணைக்குழு பின்வரும் விடயங்கள் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.

(i) அபிவிருத்தியடையாத உள்ளூர் ஆட்சி அதிகார சபைப் பிரதேசங்களில் ஏற்கனவே நிலவுகின்ற ஏற்றத்தாழ்வுகள்.

(ii) உள்ளூராட்சி அதிகார சபையின் சனத்தொகை அளவும் அதன் பூகோள ரீதியான விஸ்தீரமும்.

(iii) மத்திய அரசாங்கத்தால் இடைக்கால சபைக்கு ஒதுக்கீடு செய்யப்படும் அவ்வாறான நிதிகள் நிதி ஆணைக்குழுவினால் வழங்கப்படும் வழிநடத்தல்களுக்கமைவகவே செலவு செய்யப்பட வேண்டும்.

(iv) குறிப்பிட்ட ஒரு உள்ளூராட்சி அதிகார சபையுள் வரும் சிறுபான்மை சமூகங்களுக்கெதிராக அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடுகளில் எவ்வகையான பாரபட்சமும் இருத்தலாகாது என்பதையும் இடைக்கால சபை உறுதி செய்தல் வேண்டும்.

<u>வேலை வாய்ப்புக்கள்</u>

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வேலைவாய்ப்புக்களனைத்தும் தகுதி அடிப்படையிலும், எந்தெந்த மாவட்டங்களில் பதவி வெற்றிடங்கள் உள்ளனவோ அம்மாவட்டங்களின் இனத்துவ விகிதாசார அடிப்படையிலும் வழங்கப்படுதல் வேண்டும்.

<u>அரச காணிகள்</u>

(i) எந்த ஒரு குறிப்பிட்ட உள்ளூர் ஆட்சி அதிகார சபைப் பிரிவிலோ, அல்லது நிர்வாகப் பிரிவிலோ அல்லது மாவட்டத்திலோ அதன் சமுதாய அமைப்பில் ஏதாவதொரு வழியில் பாதிக்கக்கூடிய விதத்தில் இடைக்கால சபையானது அரச காணிகளைப் பங்கீடு செய்தால் சட்டவிரோதமாகுதல் வேண்டும்.

(ii) குறித்த ஒரு மாவட்டத்தின் சமுதாய அமைப்புக்கமைவாக அம்மாவட்டத்தின் காணியற்ற நபர்களுக்கு வழங்கப்படும் பொருட்டு, அரச காணிகள் இடைக்கால சபையால் ஒதுக்கி வைக்கப்படல் வேண்டும். எந்த ஒரு மாவட்டத்திலாவது தேவைக்கதிகமாகக் காணிகள் இருப்பின், சமுதாய நிலையியல் மாதிரியுடன் தொடர்புற்ற விதிமுறைகளுக்கு உட்பட்ட விதத்தில் அயல் மாவட்டத்தில் உள்ள காணிகளற்ற நபர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அவை பகிரப்படுதல் வேண்டும்.

<u>கலாசாரக் குழுக்கள்</u>

(i) பிரதேசத்தின் ஒவ்வொரு இனத்துவ சமூகத்திற்கும் ஒன்று என்ற ரீதியில் மூன்று (3) கலாசாரக் குழுக்கள் நிறுவப்படுதல் வேண்டும்.

(ii) இடைக்கால நிருவாக சபையில் அங்கம் வகிக்கும் ஒரு இனத்துவ சமூகத்தைச் சார்ந்த அனைத்து உறுப்பினர்களும் தாம் உறுப்பினர் என்னும் காரணத்தினால், குறித்த அச்சமூகத்துக்கான கலாசாரக் குழுவிலும் அங்கம் வகித்தல் வேண்டும்.

(iii) கலாசாரக் குழுக்கள் அந்தந்த சமூகங்களைச் சார்ந்த உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற தவிசாளரின் கீழ் இயங்குதல் வேண்டும்.

(iv) ஒரு பிரதேசத்துள்வரும் ஒரே சமூகத்தைச் சேர்ந்த எல்லா உள்ளூர் அதிகார சபைத் தலைவர்களும் கலாசாரக் குழுக்களின் கலந்துரையாடல்களில் பங்கேற்க முடியும்.

(v) ஒரு கலாசாரக் குழுவானது சமயம் மற்றும் கலாசாரம் சார்ந்த விடயங்களுக்கு பிரதேசத்திலுள்ள குறித்த சமூகத்தின் பொதுவான நலன்களை நோக்கிய வேறு ஏதேனும் விடயங்கள் பற்றியும் கலந்துரையாடித் தீர்மானமியற்றலாம்.

(vi) பிரதேசத்தில் உள்ள சகல சமூகங்களினதும் வேறுபட்ட கலாசாரங்களின் அபிவிருத்தி மற்றும் நன்மை கருதி, இடைக்கால சபையானது தனது வருடாந்த வரவு செலவு திட்டத்தில் ஒவ்வொரு கலாசாரக் குழுவினதும் சுதந்திரமான பயன்பாட்டிற்குக் குறித்த ஒரு தொகைப் பணத்தை ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

<u>சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு</u>

மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்கும் பொருட்டு வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்புக் குழுக்கள் ஏறபடுத்தப்படுதல் வேண்டும்.

<u>சமத்துவ ஆணைக்குழு</u>

குறித்த விடயங்களில் சம சந்தர்ப்பம், சமூகத்தினரிடையே சம அந்தஸ்து ஆகியவற்றை முன்னேற்றுவதற்கும், பொதுச்சபைகளுக்கெதிராக் தனிநபர்களிடமிருந்து வரும் முறைப்பாடுகளை ஆராய்வதற்கும் இடைக்கால சபையின் சட்டக் கடப்பாடுகளைக் கண்காணிக்கவும் சமத்துவ ஆணைக்குழுவொன்று ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

<u>வடக்கு கிழக்கில் இரு தனித்தனி பிராந்திய சபைகள்</u>

இடைக்கால நிருவாக சபை ஆரம்பிக்கப்பட்டு ஐந்து வருடங்கள் முடிவுற்றதும் பின்வரும் இரண்டு (2) தனித்தனிப் பிராந்திய சபைகள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

(அ) ஒன்றிணைந்த வடக்கு கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய "வடக்கு கிழக்குப் பிராந்திய சபை" என அழைக்கப்படும் பெரும்பான்மைத் தமிழர்க்ளைக் கொண்ட அலகு. இது தென்கிழக்குப் பிராந்தியம் என அழைக்கப்படும் பெரும்பான்மை முஸ்லிம் அலகினுள் வரும் பகுதிகளைத் தவிர்ந்ததாக அமைக்கப்படும்.

(ஆ) அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னர் மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களிலுள்ள பாரம்பரிய முஸ்லிம் தாயகங்களை உள்ளடக்கிய "தென்கிழக்கு பிராந்திய சபை" என அழைக்கப்படும் பெரும்பான்மை முஸ்லிம் பெரும்பான்மையைக் கொண்ட அலகு.

இலங்கைப் பிரஜைகள் என்றமட்டில் சட்டபூர்வமாக எமக்கு உரியதை விட மேலதிகமாக எதையும் முஸ்லிம்களாகிய நாம் ஒருபோதும் கேட்டதில்லை. நாட்டைப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என நாம் போராடவுமில்லை. எங்கள் குறைகளுக்குத் தீர்வுகாணுவதற்காக நாம் ஆயுதப் போராட்டம் பயங்கரவாதத்தை நடாத்தவில்லை என்ற காரணத்துக்காக தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதற்காக வடக்கு கிழக்கு முஸ்லிம்களை ஒரு அரசியல் அடிமைச் சமூகமாக்க அரசாங்கம் முற்படக் கூடாது. இக்கட்டான இக்கால கட்டத்தில் எமக்குத் துரோகம் செய்து முஸ்லிம் இளைஞர்களைப் பலவந்தமாகப் பயங்கரப் போராளிகளாக்கி எதிர்காலத்தில் வடக்குக் கிழக்கில் முஸ்லிம் உரிமைகளுக்காக மற்றுமொரு யுத்தத்தை ஏற்படுத்த முஸ்லிம்களை நிர்ப்பந்திக்க அரசாங்கம் முற்படமாட்டாது என்பது எமது நம்பிக்கை.

எம்.ஐ.எம். முஹியத்தீன் 28 ஜூன் 2004

**National Digitization Project**

***National Science Foundation***

Institute : South Eastern University of Sri Lanka

1. Place of Scanning : Main Library, South Eastern University of Sri Lanka, Oluvil
2. Date Scanned : 2018.02.15
3. Name of Digitizing Company : Sanje (Private) Ltd, No 435/16, Kottawa Rd, Hokandara North, Arangala, Hokandara
4. Scanning Officer

Name : I.W.A.C.J. Chandrasena

Signature : Charith

Certification of Scanning

*I hereby certify that the scanning of this document was carried out under my supervision, according to the norms and standards of digital scanning accurately, also keeping with the originality of the original document to be accepted in a court of law.*

Certifying Officer

Designation : Acting Librarian

Name : M. M. Mashroofa

Signature : [signature]

Date : 2018.02.15

*"This document/publication was digitized under National Digitization Project of the National Science Foundation, Sri Lanka"*